
# திராவிடத்தால் வாழ்கிறோம்

**1037**

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

# மாநாடு

**ர.பிரகாசு**

**91**

**திராவிட இயக்கம் பயன்படுத்தும் ஆயுதங்களில் மிக முக்கியமானது, மாநாடு. அந்த மாநாடுகளின் வரலாற்றை வாரம் ஒன்றாக வாசிப்போம்...**

## சென்னையில் மாநில சுயாட்சி மாநாடு!

இந்தியா முழுவதும் எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களில், மாநில சுயாட்சிக் குரல்கள் இன்று ஒலிக்கத் தொடங்கியுள்ளன. இந்த குரல்களுக்கான விதையை ஊன்றியவர் முத்தமிழறிஞர் கலைஞர். ஒன்றிய – மாநில உறவுகள் குறித்து ஆராய ஆகஸ்ட் 19, 1969 அன்று டாக்டர் பி.வி.ராஜமன்னார் தலைவராகவும், டாக்டர் ஏ.எல். முதலியார், பி.சந்திரா ரெட்டி ஆகியோரை உறுப்பினர் களாகவும் கொண்ட குழுவை அமைத்தார். 1970–ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம், திருச்சியில் நடைபெற்ற மாநாட்டில் ஐம்பெரும் முழக்கங்களை அறிமுகப்படுத்தி, அதில் 'மாநிலத்தில் சுயாட்சி; மத்தியில் கூட்டாட்சி' என்பதையும் ஒரு முழக்கமாக வைத்தார்.

அதன் தொடர்ச்சியாக, 1970–ஆம் ஆண்டு செப்டம்பர் 12, 13 ஆகிய தேதிகளில் சென்னை அண்ணா நகரில் மாநில சுயாட்சி மாநாட்டைக் கூட்டினார் கலைஞர். மேற்கு வங்க முன்னாள் முதல்வர் அஜோய் முகர்ஜி மாநாட்டைத் தொடங்கிவைத்தார். “மாநில சுயாட்சி கோரி மாநாடு நடத்தும் தி.மு.க.வுக்கு என் நன்றி. தமிழ் மொழி, திராவிட கலாச்சாரத்தின் சின்னமாக தி.மு.கழகம் விளங்குகிறது” என்றார் அவர்.

காயிதே மில்லத், பிரணாப் முகர்ஜி, என்.ஸ்ரீகண்டன் நாயர், சோசலிஸ்ட் தலைவர் அரங்கில் ஸ்ரீதரன், எஸ்.எம்.கிருஷ்ணா உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். மாநாட்டிற்குத் தலைமை தாங்கிய கலைஞர், பெரியாரைப் பேச அழைக்கும்போது, ‘தலைவரின் தலைவர் இப்போது உரையாற்றுவார்’ என்று அழைத்தார். “சுதந்திரம் பெற்று 23 வருடங்கள் கழித்தும், இந்நாட்டின் மக்கள் மாநில அரசுகள் தங்களுக்கு அளிக்கப்பட்டுள்ள உரிமைகள் போதாது என்று மாநில சுயாட்சி கேட்கிறார்கள். இதுவே நமது சுதந்திரத்தின் வெட்கக்கேடான நிலையை காட்டவில்லையா? வெள்ளைக்காரன் முன்பு வைத்திருந்த எல்லா அதிகாரங்களும் இப்போது டில்லியில் உள்ளன. டில்லியின் அதிகாரத்துக்கு ஆதாரமாக உள்ள அரசியல் சட்டமே இதற்குக் காரணம். மாநில சுயாட்சி வழங்கப்படவில்லை என்றால் விபரீத விளைவுகள் ஏற்படுவது நிச்சயம்” என்று எச்சரித்தார்.




ஓவியம் : சிகரன்

கலைஞர் பேசும்போது, “மாநிலங்களின் சட்டம் இயற்றும் அதிகாரங்களைக் கூட கட்டுப்படுத்தும் அதிகாரம் மத்தியிலே இருக்கிறது. அவசர நிலை என்று கூறி, எந்த அதிகாரத்தையும் எடுத்துக்கொள்ளும் அதிகாரம் மத்தியில் இருக்கிறது. இவைகள் மாற்றப்பட வேண்டும். அரசியல் சட்டத்தில் உள்ள இந்தப் பகுதிகள் அகற்றப்பட வேண்டும். நமது தேவைகளை நாமே பூர்த்தி செய்துகொள்ளவே மாநில சுயாட்சி கேட்கிறோம். மாநிலத்தில் தொழில்கள் வளர சுயாட்சி கேட்கிறோம்” என்று மாநில சுயாட்சிக்கான அவசியம் குறித்து மிக விரிவாக எடுத்துரைத்தார்.

மாநிலங்களுக்கு சுயாட்சி உரிமைகள் வழங்குவது குறித்து, உடனடியாக விவாதிக்க ஒன்றிய அரசு முன்வர வேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மாநாட்டுக்கு போதிய அளவில் கூட்டம் வரவில்லை என்று சில பத்திரிகைகள் எழுதின. ரூ.1.15 லட்சம் மாநாட்டுத் திடலில் வசூலானது என்று அறிவித்து, கூட்டம் வராமலா இவ்வளவு நிதி வசூலானது என கேள்வி எழுப்பினார் கலைஞர். இதைக் குறிப்பிட்டு செய்தி வெளியிட்ட விடுதலை நாளேடு, “இனியாவது பார்ப்பன ஏடுகளுக்கு புத்தி வருமா? தி.மு.க.வுக்கு மக்கள் ஆதரவு இல்லை என்று புளுகி, மூக்கறுபடுவது இன்னும் எத்தனை நாளைக்கோ? இந்த விஷமச் செய்தி பரப்பும் விஷப் பூண்டுகளை தமிழக மக்கள் இனம் கண்டுகொள்ள நல்ல வாய்ப்பு இது” என்று காட்டமாக பதிலடி தந்தது.

...கூட்டம் திரளும்

## ‘மனிதம் நமது அடையாளம்’ திராவிட முழக்கம் ஒலிக்கட்டும்!

திராவிடர் விடுதலைக் கழகம், டிசம்பர் 29, அன்று ’ஜாதி தீண்டாமை எதிர்ப்புப் போராட்டத்தை’ கோவையில் நடத்த உள்ளது. போராட்டத்தின் நோக்கத்தை விளக்கும் விதமாக, தமிழ்நாடு முழுவதும் பிரச்சாரக் கூட்டங்களை நடத்தி வருகிறது.




அதையொட்டி சென்னையில் ஐந்து நாட்களுக்கு ‘மனிதம் நமது அடையாளம்! ஜாதி நமக்கு அவமானம்’ என தொடர் கூட்டங்களை நடத்தத் திட்டமிட்டுள்ளனர்.

நாள் : 02.12.2025
இடம் : திருவொற்றியூர், காலை 10.30 மணி
இடம் : வண்ணாரப்பேட்டை, மாலை 4.00 மணி

நாள் : 5.12.2025, மாலை 6.00 மணி
இடம் : காமராஜர் சாலை, ராஜா அண்ணாமலைபுரம்

நாள்: 8.12.2025, மாலை 6.00 மணி
இடம் : பல்லக்கு மாநகர், மயிலாப்பூர்

நாள் : 10.12.2025, மாலை 6.00 மணி
இடம் : செயின்ட் மேரிஸ் பாலம்,
விசாலாட்சி தோட்டம், மந்தைவெளி

திராவிடர் விடுதலைக் கழகத்தின் முன்னணி நிர்வாகிகள், தலைமைக் கழகப் பேச்சாளர் சைதை மா.அன்பரசு, ஊடகவியலாளர்கள் இந்திரகுமார் தேரடி, ‘மைனர்’ வீரமணி, மகிழவன் ஆகியோர் பிரச்சாரங்களில் ஈடுபடுகின்றனர். ‘சாதிப் பெருமை’ என மக்களை பிளவுபடுத்தும் சக்திகளுக்கு எதிராக ‘மனிதம் நமது அடையாளம்’ என்கிற திராவிட முழக்கம் தமிழ்நாடு எங்கும் ஒலிக்கட்டும்.

# பாசறை படிப்பறை

**கௌதம் ராஜ்**

**91**


**சுயமரியாதை-சமத்துவம்- சமூக நீதி நிரம்பிய உலகைப் படிக்க, படைக்க அவசியமான புத்தகங்களை வாரந்தோறும் அறிமுகம் செய்கிறது இந்தப் பகுதி...**

## அம்பேத்கர் குறித்து தேடுவோம்!

இடதுசாரிகள் முதல் வலதுசாரிகள் வரை அனைவராலும் சொந்தம் கொண்டாடப் படும் ஒருவராக சமகாலத்தில் அம்பேத்கர் திகழ்கிறார். அவரது கருத்துகள் மீது எந்த அக்கறையும் செலுத்தாமல் வெறும் பிம்பமாக அம்பேத்கரை தங்களவராகக் காட்டிக்கொள்ளும் போக்கு, சில தரப்பினரிடம் வெளிப்படுகிறது.

இந்நிலையில், அம்பேத்கரின் வாழ்க்கை வரலாற்று நூல் ஒன்றை, காங்கிரஸ் கட்சியின் மக்களவை உறுப்பினர் சசி தரூர் எழுதி இருக்கிறார். அம்பேத்கரின் வாழ்க்கை (Life) பற்றி முதல் பகுதியும், அவர் விட்டுச் சென்ற மரபு (Legacy) பற்றி இரண்டாம் பகுதியும் பேசுகிறது.

அம்பேத்கரின் வாழ்க்கையை ஐந்து பாகங்களாகப் பிரித்துக் கொள்கிறார் நூலாசிரியர், பிறப்பிலிருந்து 1923 வரை முதல் பாகமாகவும், 1923 முதல் மகத் சத்தியாகிரகம், நாசிக் மாநாடு என்பவை இரண்டாம் பாகமாகவும், வட்டமேசை மாநாடுகள் மூன்றாம் பாகமாகவும், இரண்டு அரசியல் கட்சிகளை (ILP, SCF) தோற்றுவித்த காலத்தை நான்காம் பாகமாகவும், அரசியலமைப்புச் சட்ட வரைவுக் குழு தலைவர் முதல் இறப்பு வரையிலான பகுதிகள் ஐந்தாம் பாகமாகவும் இடம்பெற்றிருக்கின்றன.




அம்பேத்கர் வாழ்க்கை பற்றி மேலோட்டமான தகவல்களை மட்டுமே இந்நூல் கொண்டிருக்கிறது, முடிந்தளவுக்கு அனைத்து நிகழ்வுகளையும் தொட்டுக் காட்டி அதன் மூலம் தேடலை விரித்துக்கொள்ளும் பாங்கில் இந்நூல் அமைந்திருக்கிறது. அடிக்குறிப்புகளும், நூல் பட்டியலும் எதிர்கால அம்பேத்கர் ஆய்வாளர்களுக்கு துணை செய்யும் வகையில், இருப்பதை உணர முடிகிறது. 2022–ஆம் ஆண்டு வரை வெளியான அம்பேத்கர் பற்றிய அனைத்து முக்கியமான புத்தகங்கள் பற்றிய குறிப்புகளும் இதில் அடங்கும்.

இந்நூல் அம்பேத்கரின் நிறைகளை மட்டும் சுட்டும் ஒன்றல்ல; விமர்சனங்களையும் கொண்டிருக்கும் ஒன்றுதான் என்று சொல்லி விட்டு, நான்கு குறைகளைப் பட்டியலிடுகிறார் சசி தரூர். அவை,

1. ஆதிவாசிகள் பற்றி அம்பேத்கர் கொண்டிருந்த கருத்து, 2. இந்துக்களையும் இந்து மதத்தையும் அவர் விமர்சித்த விதம், 3. காந்தியிடம் அவர் கொண்டிருந்த தீராத முரண்பாடு, 4. மையப் படுத்தப்பட்ட அதிகாரத்தின் மீது அவர் கொண்டிருந்த ஈடுபாடு.

இவற்றுள் முதல் மற்றும் நான்காம் விமர்சனம் ஓரளவுக்கு ஏற்புடைய ஒன்றாகும், அதுவும் நான்காவது விமர்சனத்துக்கு பதில் சொல்ல அம்பேத்கரியர்களிடம் நியாயமான வாதமே உள்ளது. இரண்டு மற்றும் மூன்றாவது விமர்சனங்கள் சசி தரூர் கொண்டிருக்கும் நம்பிக்கையின் காரணமாக எழும் ஒன்று. அது தனிநபரது கருத்தியல் சார்ந்தது. ஒரு தலித்தாகவோ அல்லது விளிம்புநிலை பிற்படுத்தப்பட்ட சாதியைச் சேர்ந்த ஒருவராகவோ இருக்கும்பட்சத்தில் இதை ஒரு விமர்சனமாக மனம் ஏற்காது.

அம்பேத்கர் பற்றி வாசிக்கும் ஒரு ஆரம்பகட்ட வாசகருக்கு இந்நூலை பரிந்துரைக்கலாம், விமர்சனம் கலந்த பார்வையோடு இந்நூலை அணுகுவது உகந்தது. ஆய்வாளர்கள் புத்தகப் பட்டியலைப் பயன்படுத்திக் கொள்ளலாம், தரமாக இருக்கிறது. நூலை படித்துவிட்டு டாக்டர் அம்பேத்கர் குறித்து தேட தொடங்க வேண்டும். இதுவே இந்நூல் கூறும் மறைமுகச் செய்தி.

...வாசிப்போம்.

## ஃப்ளாஷ்பேக்





இ.வசந்தநாத்

### ‘மதியழகி’ என பெயர் சூட்டிய தலைவர்!

2013-ஆம் ஆண்டு, ஏப்ரல் மாதம் தானைத் தலைவர் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களை சந்தித்து, என் மகளுக்கு பெயர் சூட்டும் வாய்ப்பு பெற்றேன். மதியழகி என்று பெயர் சூட்டி வாழ்த்தினார். அந்த நாளை நினைத்து இன்றும் மனம் மகிழ்கிறேன்.

**– இ.வசந்தநாத்,**
**நகர அமைப்பாளர், ஆதிதிராவிடர் நலக் குழு அணி,**
**நகர தி.மு.க. ஆம்பூர் மேற்கு, திருப்பத்தூர் மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை – 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## கழகவூருக

### கழகத்தினரைக் காப்பாற்றிய எம்.ஆர்.ராதா!

1953-ஆம் ஆண்டு ஜூலை 14 அன்று, குலக்கல்வித் திட்டத்தை எதிர்த்து, ராஜாஜி இல்லம் முன் அன்னை சத்தியவாணி முத்து தலைமையில் முற்றுகைப் போராட்டம் நடைபெற்றது. 20 பேர் கைது செய்யப்பட்டனர். எட்டாம் நாள் சி.வி.எம்.அண்ணாமலை தலைமையில் போராடிய 87 பேர் கைது செய்யப்பட்டனர். தாக்குதலுக்கு ஆளான 3 பேர் நடுத்தெருவில் கிடந்தனர். அவர்களை அவ்வழியே சென்ற நடிகவேள் எம்.ஆர்.ராதா, காரில் ஏற்றிச்சென்று மருத்துவமனையில் சேர்த்தார்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131